நாள்: **25.04.2024**

**O.S. No. 60/2022**

**வா.சா.3**

**பெயர்: லெட்சுமணன், த/பெ. வெங்கடாஜலம்**

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

நீதிமன்ற அழைப்பாணை பெறப்பட்டு தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 2005 ம் ஆண்டு வாதி, பிரதிவாதிக்கிடையே குடும்ப பாகம் ஏற்பட்டதன் காரணமாக இருவரும் தனித்தனியே வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில் பிரதிவாதிக்கு தான் இந்த தாவா சொத்து என்று முடிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. வாதி ராமச்சந்திரனுக்கு முடிவு செய்யப்பட்டது. வாதி அனுபவம் செய்து வருகிறார். அந்த பாகபத்திரத்தில் குடும்பத்தில் உள்ள அண்ணன், தம்பி அனைவரும் கையொப்பம் செய்து ஒருமித்த கருத்துடன் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். வாதி ராமச்சந்திரன் சாகுபடி செய்து வருகிறார். நான் உடனிருந்து வேலை செய்து கொடுக்கிறேன். ஆனால், வழக்குரையில் வாதி அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாதி உழவு செய்த தேதியில் நானும், வாதி ராமச்சந்திரன் மற்றும் அவரது மகன் வெங்கடேஷ் ஆகியோர்கள் பணி செய்தபோது பிரதிவாதி ராமன் அங்கு வந்து உழவு பணி செய்யக்கூடாது என்றும், எனக்கு சொந்தமான பங்கு என்றும் சொல்லி பிரச்சனை செய்தார். என்ன ரக நெல் விதைத்து, அறுவடை செய்து, எங்கு விற்பனை செய்தார்கள் என்ற விபரங்கள் எனக்கு தெரியாது. வாதி வழக்குரையில் எதுவும் தெரிவிக்காத நிலையில், வாதி எனது அண்ணன் என்ற முறையில் நான் சாகுபடிக்கு பணி செய்து கொடுத்ததாக வழக்கிற்காக மிகையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதிகள் வந்து பிரச்சனை செய்தததாக சொல்லப்படும் தேதி தெரியுமா என்றால் 17.10.2022 ம் தேதியாகும்.

தாவா சொத்தின் புல எண். 165/5 அதன் விஸ்தீரணம் 37 ஏர்ஸ். 165/6 அதன் விஸ்தீரணம் 27 ஏர்ஸ். வாதி அவரது சொத்தில் பிரதிவாதி ராமன் அத்துமீறி நுழையக்கூடாது என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி நான் உதவி செய்ததாக குறிப்பிடாத நிலையில் வாதி எனது சகோதரர் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.